**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 394/2012**

நாள்: 24.10.2025.

பெயர்: சகுந்தலா (பி.வா.சா.1) க/பெ: திருசங்கு

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை...

1) தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டை சார்ந்தது. தாவா சொத்தின் தென்புறம் எனது வீடு உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.222/5. தாவா சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டின் நான்கெல்லை என்ன என்றால் வடபுறம் சேகர் வீடு, தென்புறம் ரெங்கசாமி வீடு, கிழக்கில் ராஜமாணிக்கம் வயல், மேற்கில் மெயின் ரோடு. நாங்கள் யாரிடம் நிலம் வாங்கி வீடு கட்டியுள்ளோம் என்றால் கோவிந்தராஜ் என்பவரிடம் வாங்கினோம். எப்போது வாங்கினோம் என்றால் 07.05.1990. கோவிந்தராஜிடமிருந்து வாங்கிய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். எனக்கு எழுதப்படிக்க தெரியாது.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/தி.சகுந்தலா/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.